காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு - 2020

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்கவில்லை. அபிப்பிராயத்தினை மறுப்பதற்கான அடிப்படைப் பகுதியில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதுள்ளது.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காட்டப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும்

ஆணைக்குழு தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

ஆணைக்குழுவின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, நிருவாகம் தொடர்புபட்ட தரப்பினர்களினால் வகிக்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் அவசியமானதாகும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு( நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க பேணப்படுகின்ற கணக்காய்வினை அடிப்படையாகக் கொண்டு ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களின் மீது கணக்காய்வாளரின் அறிக்கையினை வழங்குவது எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும், அபிப்பிராயம் தெரிவிப்பதனை மறுப்பதற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எனக்கு முடியாதிருந்தது.

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

---

**1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மை**

---

| குறிப்பிட்ட நியமங்களின் தொடர்புகளுடன் இணங்காமை. | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம் நியமத்தின் மூலம் தேவைப்படுத்தப்பட்ட அல்லது அனுமதியளிக்கப்பட்டவை தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகள் ஒன்றுக்கொன்று எதிரீடு செய்யப்பட முடியாத போதிலும், குத்தகைக் காணிகளுக்காகப் பெறப்பட்ட வருமானம் கணக்குகளில் எடுக்கப்பட்ட போது பெற வேண்டிய குத்தகை வருமானக் கணக்கில் ரூபா 8,635,559 ஆன மிகுதியொன்று குத்தகை வருமானக் கணக்கிற்கு எதிரீடு செய்யப்பட்டு இருந்ததுடன், குறிப்பிட்ட சீராக்கங்கள் தொடர்பான தகவல்கள் கணக்குக் குறிப்புக்களின் மூலமும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படுகின்றேன். இறுதியில் வருமானப் பிரிவின் மூலம் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் முன்னைய வருடங்களுக்கான 2020 ஆம் வருடத்தில் பெறப்பட்ட குத்தகை வருமானம் ரூபா 8,635,559 ஆனது குறைவாக குத்தகை வருமானக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்தமையை திருத்துவதற்காக ரூபா 8,635,559 ஆன தொகை குறிப்பிடப்பட்டுள்ளது. | கணக்குகளுக்கிடையே பெறுமதிகள் எதிரீடு செய்யப்படும் போது இலங்கைப் பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 01 இன் 48 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் 39 ஆம் பந்தியின் பிரகாரம் மதிப்பீடொன்று திருத்தப்படல் முன்னைய காலப்பகுதிக்கு உரியதாக இருக்காத போதிலும், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் கணக்கிடப்பட்டிருந்த பணிக்கொடை ஒதுக்கங்களின் பிரகாரம் ரூபா 187,905,904 மேலதிக ஒதுக்கமொன்று முன்னைய வருடத்தின் இலாபத்திற்கு சீராக்கப்பட்ட மற்றும் ரூபா 6,270,095 ஆன செலவொன்று மீளாய்வாண்டின் இலாபத்திற்கு சீராக்கப்பட்ட காரணத்தினால் இலாபம் ரூபா 181,635,810 ஆனது குறைத்து நிதிக்கூற்றக்களில் காட்டப்பட்டிருந்தது. | உடன்படுகின்றேன். 2021 ஆம் நிதியாண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்த தவறு 2021 ஆம் வருடத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது திருத்தப்படும். |
| (இ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கான பிழைகளானது கடந்த காலப்பகுதிற்குப் பொருத்தமான வகையில் திருத்தப்பட வேண்டிய போதிலும், கடந்த வருடங்களுக்கான மொத்தம் ரூபா 108,388,478 ஆன காணிக் குத்தகை வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானமாக கணக்கிடப்பட்டமையால் அப் பெறுமதியில் மீளாய்வாண்டின் இலாபம் குறைத்துக் கணக்கிடப்பட்டிருந்தது. | உடன்படுகின்றேன். 2021 ஆம் நிதியாண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறித்த தவறு 2021 ஆம் வருடத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது திருத்தப்படும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான பெற்ற வட்டி வருமானம் ரூபா 37,194,054 ஆனது அதிகமாக குறிப்பிடப்பட்டிருந்தமை, வருடாந்த பணிக்கொடைச் செலவு ரூபா 89,184,312 அதிகமாகக் | உடன்படுகின்றேன். 2021 ஆம் நிதியாண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | காசுப் பாய்ச்சல் கூற்றுக்கு உள்ளடக்கப்பட வேண்டியது உள்ளபடியான காசு உட்பாய்ச்சல் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | குறிப்பிடப்பட்டிருந்தமை மற்றும் பிழைகள் திருத்தப்பட்ட போது குறிப்பிடப்பட்ட ரூபா 673,010 ஆன பொறுப்புக்கள் அதிகாப்பானது காசு உட்பாய்ச்சலாக குறிப்பிடப்பட்டிருந்தமை போன்ற தவறுகள் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளில் காசுப்பாய்ச்சல் ரூபா 127,051,376 ஆனது அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிப்பதின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | | வெளிப்பாய்ச்சல் என்பன ஆகும். |
| (ஆ) | 1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு சட்டத்தின் பிரகாரம், தோட்டக் கம்பனிகளிடமிருந்து பொறுப்பேற்கப்பட்ட காணிகளுக்காகச் செலுத்த வேண்டிய இழப்பீடு தொங்கல் (கட்டம் - I மற்றும் II) கணக்குகளில் காட்டப்பட்டுள்ள ரூபா 215,914,519 ஆன மிகுதி மீளாய்வாண்டின் இறுதிவரையில் தீர்க்கப்படாதிருந்ததுடன் பொறுப்பின் தன்மை தொடர்பான சுருக்கமான விளக்கமொன்று கணக்குக் குறிப்புக்களின் மூலம் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | இழப்பீட்டுத் தொகை உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் முதலாம் கட்டத்தின் கீழ் காணிகளை வெளியிட்ட நபர்கள் மற்றும் தனிப்பட்ட கம்பனிகளுக்கு மற்றும் இரண்டாம் கட்டத்தின் கீழ் பொறுப்பேற்கப்பட்ட கம்பனிகளுக்கு இழப்பீடுகளைச் செலுத்துவதற்கு இத்தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் கோரிக்கை விடுவிக்கப்பட்ட பின்னர் வழங்குவற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. கம்பனிகளின் பொறுப்புக்களை (பணிக்கொடை, தொழிலாளர் கொடுப்பனவுகள் போன்ற) செலுத்தி முடிப்பதற்கும் இத்தொகை தேக்கி வைக்கப்பட்டது. | இழப்பீடுகளைச் செலுத்தி முடித்து மிகுதிகளைத் தீர்ப்பதற்கு மற்றும் பொறுப்புக்களின் தன்மை கணக்குக் குறிப்புக்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பெற வேண்டிய காணிக் குத்தகைக் கட்டணம் மற்றும் அதனடிப்படையில் அறவிடப்படுகின்ற மிகைக் கட்டணப் பெறுமதியில் ரூபா 53,529,818 ஆனது மீளாய்வாணடின் பதிவளிக்கப்பட்டிருந்த | 2019.12.02 ஆந் திகதிய அமைச்சரவைக் குறிப்பின் பிரகாரம் குத்தகைக் கட்டணம் சேர்க்கப்படுவதற்காக இலகுவான மற்றும் வசதியான முறையொன்று தயாரிக்கப்படுவதற்காக | குத்தகைக் கட்டணம் மற்றும் மிகைக் கட்டணம் பதிவளித்தல் செய்யப்பட்ட வருடத்தில் செலவொள்றாக குறிக்கப்பட |

| | | |
|---|---|---|
| போதிலும் குறித்த தாக்கம் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான செலவொன்றாக குறிப்பிடப்படாது கடந்த வருடத்தின் இலாபத்திற்கு சீராக்கப்பட்டதால் அப் பெறுமதியால் மீளாய்வாண்டின் இலாபம் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. இப்பதிவளிப்பிற்காக 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 1/2020 இன் பிரகாரம் திருத்தப்பட்ட நி.பி 113 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் திறைசேரிச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்படவில்லை. | நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையுடன் விஞ்ஞாபன இலக்கம் 6/2020 ஆன அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அவ்வறிக்கையில் 3.1 இலிருந்து 3.10 வரையான முன்மொழிவுகள் குறிப்பிட்ட அதிகாரிகளுடன் இணைந்து செயற்படுத்துவதற்கு அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. இந்த அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம் செயற்படுவதற்கு 2020.10.23 ஆந் திகதி நடாத்தப்பட்ட 739 ஆவது ஆணைக்குழுவின் அமர்வில் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2019.12.31 வரையில் பெற வேண்டிய 10% தண்ட வட்டித்தொகை கடந்த வருட இலாபத்திற்கெதிராக முடிவுக் கணக்கு அறிக்கைகளில் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும் 2019.12.24 ஆந் திகதிய காணி ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இல் 2019/3 ஆல் குறிப்பிடப்பட்ட கைத்தொழில் பேட்டைகளுக்காக வழங்கப்பட்ட காணிகளுக்கு உரிய முன்னைய 05 வருடத்திற்கான குத்தகைக் கட்டணத் தொகையில் 90% ஆக வரிச்சலுகை சீராக்கப்பட்டது. அத் தொகை தற்போது செலுத்தி முடிக்கப்பட்டுள்ளதுள்ளமையால் பெற வேணடிய குத்தகைக் கட்டணம் வருமானத்திற்கு சீராக்கப்பட்டுள்ளது. | வேண்டியதுடன் பெற வேண்டிய தொகையைப் பதிவளிப்பதற்கு முன்னர் நி.பி இன் பிரகாரம் அதற்கான அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

### 1.5.3 பொருத்தமற்ற மதிப்பீடு அல்லது மதிப்பிடல்.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1972 ஆம் ஆண்டில் ஆணைக்குழு | முழுமையான விபரங்களுடன் காணிப் பதிவேட்டினைத் | விரைவில் நாளது வரையாக்கப்பட்ட |

| | | |
|---|---|---|
| தோற்றுவிக்கப்பட்ட திகதியிலிருந்து சுவீகரிக்கப்பட்ட காணிகள் தொடர்பாக அக்காணிகளின் ஏக்கர் அளவு, ஒவ்வொரு காணியும் அமைந்துள்ள பிரதேசம், சுவீகரிக்கப்பட்டது யாரிடமிருந்து, தற்பொழுது பயன்படுத்துவதற்கு ஒப்படைத்தல் என்பன தொடர்பான விபரம் மற்றும் உரிய வர்த்தமானி அறிவித்தல் மற்றும் காணிகளில் அத்துமீறிக் குடியிருத்தல்களுக்குரிய அனைத்து விபரங்கள் தொடர்பான முழுமையான விபரங்களையும் உள்ளடக்கிய ஒரு பதிவேடு நிறுவனத்தினால் பேணப்பட்டிருக்காததுடன் அது தொடர்பாக துணை ஆவணங்களின் மூலம் விளக்கமளிப்பதற்கும் நிறுவனத்திற்கு முடியாதிருந்தது. அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 676,169,345 தொகையான பொறுப்பேற்கப்பட்ட காணிகளின் உள்ளமையையும் மதிப்பீடு செய்தலின் சரியான தன்மையையும் கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது. | தயாரிப்பதற்கு முதலாம் கட்டத்தின் கீழ் சகல தகவல்களும் கணனி மயாமாக்கப்பட்டுள்ளது. அத் தகவல்கள் இரண்டாம் கட்டணத்தின் கீழ் மாவட்ட மாவட்டத்தில் காணப்பட்ட கோவைகளை ஆய்வு செய்வதன் மூலம் மற்றும் களங்களை இனங்காண்பதன் மூலம் இற்றை வரையில் காணிப் பதிவேடு தயாரித்தல் மற்றும் நாளது வரையாக்கல் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருவதால் அப் பதிவேடு தயாரித்து முடிந்த பின்னர் காணிகளை மதிப்பீட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணிப் பதிவேட்டினை தயாரித்தல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 2,789,025,759 பெறுமதியான பெற வேண்டிய கருங்கல் வரி, காணி வரி, சந்தை மற்றும் ஏனைய பெற வேண்டிய மிகுதி, முன்னர் பெறப்பட்ட குத்தகைக் கட்டணங்கள் மற்றும் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மிகுதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக குத்தகைதாரரின் | பெற வேண்டிய சல்லிக்கல் வரி வருமானம் / பெற வேண்டிய காணிக் குத்தகை வருமானம் / முன்னர் பெறப்பட்ட குத்தகை வருமானம் சல்லிக்கல் மற்றும் ஏனைய குத்தகை தாரரின் குத்திைப் பதிவேடுகள் நாளது வரையாக்கப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் 2021.11.30 இற்கு முன்னர் குறிப்பிட்ட குத்தகைப் பதிவேடொன்று வழங்கப்படுவதற்கு நடவடிக்கை | கணக்காய்விற்கு உரிய சாட்சிகள் சமர்ப்பிப்படல் வேண்டும். |

| | |
|---|---|
| பெயர்ப்பட்டியல், குத்தகை உடன்படிக்கை, கடன்காலப் பகுப்பாய்வு, குத்தகை பெறப்பட்ட குத்தகைத் தொகைக்கான காலப்பகுதி, மீதி உறுதிப்படுத்தல் போன்ற தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | எடுக்கப்படும். 2020.12.31 இல் சந்தை மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய கணக்குகளுக்காக மிகுதி உறுதிப்படுத்தல் கடிதங்களை கோருவதற்கான கடிதங்கள் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு பிரதிகள் சகிதம் அனுப்பப்பட்டுள்ளது. |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் காணப்பட்ட மொத்தம் ரூபா 2,609,227,062 ஆன வியாபார மற்றும் ஏனைய வேண்டிய மிகுதிகளை உள்ளடக்கியதாக 08 அரச நிதியாளர்களிடமிருநது கிடைக்க வேண்டிய 30 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 2,127,271,837 மற்றும் 10 வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 8,353,409 என்பன மீளாய்வாண்டின் இறுதி வரையில் அறவிடப்படுவதற்கு தவறியிருந்தது. | 2020.07.20 ஆந் திகதி காட்டப்பட்ட ஆணைக்குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் பிரகாரம் இனங்காணப்படாத கடன்பட்டோர் மிகுதிகள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக கண்டு கொள்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்ததுடன். அதன் பரிந்துரையின் அடிப்படையில் காலங் கடந்த பெரிய அளவிலான கடன்பட்டோர் தொடர்பாக குறிப்பிட்ட நேரடி அமைச்சின் மூலம் அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்படுவதற்காக காணி அமைச்சிற்கு 2021.11.10 ஆந் திகதி அனுப்பப்பட்டுள்ளது. | பெற வேண்டிய தொகைகளை அறவிடுவதற்கு அல்லது அவ்வாறு செய்யாவிட்டால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையின் கீழ் பதிவளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) களுத்துறை மற்றும் கம்பஹா ஆகிய இரு மாவட்டங்களில் அமைந்துள்ள 08 காணித்துண்டுகளை குத்தகைக்கு விட்டதால் அறவிடப்பட வேண்டிய ரூபா 2,311,017 ஆனது 20 வருட காலமாக நிலுவையாக காணப்பட்டு வருவதுடன், குறிப்பிட்ட குத்தகைப் பணம் | களுத்துறை மாவட்டத்தின் பரோடெல்வத்தை தோட்டத்தின் 7/1997 ஆம் திட்ட 7 ஆம் இலக்க பிரிவிற்கானது குத்தகைதாரரினால் செலுத்தப்பட்டுள்ளது. மில்லேவத்த இலக்கம் 6550 பகுதி இலக்கம் 65/B பிரிவிற்கான தொகையைச் குத்தகைதாரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் | பெற வேண்டிய தொகையை அறவிடுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | செலுத்துமாறு கொடுப்பனவுகள் தொடர்பான குறிப்பொன்று இல்லை. மேலும் இலிம்பவத்த, பராடெல் வத்த மற்றும் கம்பஹா மாவட்டத்தின் கஹட்டகஹவத்த போன்ற இடங்களில் குத்தகைதாரர் தொடர்பான கோவைகளின் தகவல்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. மேலும், பாலுவத்தக் காணியின் குத்தகைதாரரிடமிருந்து ரூபா 112,322 ஆன தொகையொன்று அறவிடப்பட்டுள்ளது. | |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் காணப்பட்ட மொத்தம் ரூபா 14,080,850 ஆன காணிக் குத்தகை முற்பணக் கணக்கு மீதிகளின் உள்ளடக்கப்பட்ட 269 தனிப்பட்டவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த ரூபா 11,215,815 ஆன முற்பணத் தொகை 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக தேக்கி வைக்கப்பட்டிருந்ததுடன், குறிப்பிட்ட காணிகளை சட்டரீதியாக குத்தகைக்கு விடுவதற்கோ அல்லது மீண்டும் தீர்ப்பதற்கு ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2002-2004 காலப்பகுதியில் அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் தடை செய்யப்பட்டிருந்த இக் காணிகளுக்காக அறவிடப்பட்டிருந்த முற்பணத் தொகை குறிப்பிட்ட சிக்கல்களை தீர்த்து வைக்காமையின் அடிப்படையில் மேலும் குத்தகை முற்பணமாக கணக்குகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | தேக்கி வைக்கப்பட்டுள்ள முற்பணத் தொகை மீண்டும் தீர்க்கப்படுவதற்கு அல்லது குறித்த காணிகளை சட்டரீதியாக குத்தகைக்கு விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வியாபார மற்றும் ஏனைய கடன் மீதியினுள் 04 நானாவித தனிப்பட்ட நிறுவனங்களுக்கச் செலுத்த வேண்டிய ரூபா 582,991 ஆனது 20 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாகவும் ரூபா | அனைத்து நிதியாண்டிற்குமான வியாபார மற்றும் செலுத்த வேண்டிய கடன்கொடுத்தொர் மீதி உறுதிப்படுத்துவதற்காக உறுதிப்படுத்தல்கள் | இவ் வியாபார மற்றும் ஏனைய கடன் மிகுதிகள் தீர்க்கப்படுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| 157,300 ஆனது 13 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் முன்கொண்டு வரப்பட்டுக் காணப்படுவதுடன் அவற்றை தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அனுப்பப்பட்டுள்ளதுடன் குறிப்பிட்ட உறுதி மீதிகள் உறுதிப்படுத்தல்கள் எமக்கு கிடைக்காமையால் அந்த ஒவ்வொரு நிறுவகத்திற்குமான மிகுதிகள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் மேற்கொண்ட நடவடிக்ளை எடுக்கப்படும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

| | சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை நி.பி 371(5) | இடைக்கால உபகட்டு நிதியொன்று குறிப்பிட்ட பணி நிறைவடைந்து 10 நாட்களுக்குள் செலுத்தப்பட வேண்டியதுடன், 24 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 641,605 பெறுமதியான உப கட்டுநிதி தீர்க்கப்படுவதற்கு 20 நாட்கள் தொடக்கம் 290 நாட்கள் வரையான கால வீச்சில் தாமதமாகி இருந்தது. | முற்பணத் தொகையைத் தீர்ப்பது தொடர்பாகப் பின்பற்றப்பட வேண்டிய விதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பாக தெரியப்படுத்தி அம் முற்பணத் தொகை குறிப்பிட்ட அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக எழுத்து மூலமாகவும் அனைத்து நிறைவேற்று அதிகாரிகள் மற்றும் மாவட்டச் செயலகப் பணிப்பாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | முற்பணம் நி.பி பிரகாரம் தீர்க்கப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் vii ஆம் அத்தியாயத்தின் 12 ஆம் பந்தியின் 12.5.4 மற்றும் 12.7 ஆம் பிரிவுகள் | பதிற்கடமை அடிப்படையில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கு தமது நிரந்தர பதவியின் சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக செலுத்த வேண்டிய பணம் பதிற்கடமை பதவியின் ஆரம்பச் சம்பளத்தில் 25% உச்ச அளவினை மிகைக்காதிருக்க வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தும் அதற்கு முரணாக சபையின் பணிப்பாளர் நாயகமாக பதிற்கடமையாற்றிய உத்தியோகத்தருக்கு அங்கீகரிக்கப்பட்ட சம்பளம் மற்றும் படிகளுக்கு | 2017.07.27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 9780 ஆம் இலக்க ஆணைக்குழுக் கூட்டத்தின் போது தலைவர், நிறைவேற்றுப் பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர் நாயகத்திற்கு முறையே ரூபா 25,000 மற்றும் ரூபா 15,000 வீதம் உபசாரப்படியொன்று வழங்கப்படுவதற்கு ஆணைக்குழு அங்கீகரித்துள்ளது. பின்னர் 2018.01.25 ஆந் திகதிய 10111 ஆம் இலக்க ஆணைக்குழுவின் தீர்மானத்தின் பிரகாரம் மேல் மட்ட அதிகாரிகளுக்கு மாதாந்த இல்லப்படி | சட்டரீதியற்ற கொடுப்பனவுகள் மீண்டும் அறவிடப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேலதிகமாக வீட்டு வாடகை, போக்குவரத்து, தொலைபேசி மற்றும் உபசரிப்பு படிகளாக ரூபா 747,750 மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்தது. | வழங்குவதற்கு ஆணைக்குழு அங்கீகரித்துள்ளது. மேலும் 2020.02.12 ஆம் திகதிய 11006 ஆம் இலக்க ஆணைக்குழுவின் தீர்மானத்துடன் உபசரிப்பு மற்றும் இல்லப்படிக் கொடுப்பனவுகள் வழங்கப்படுவதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. அத் தீர்மானத்தின் பிரகாரம் குறிப்பிட்ட படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | |
| (இ) | 01/2014 ஆம் இலக்க 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை. | சுற்றறிக்கைப் பிரகாரம் ஒருங்கிணைந்த நடவடிக்கைத் திட்டத்தினை அடிப்படையாககக் கொண்டு எதிர்வரும் நிதியான்டில் செயற்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட வணிக நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டு செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியுள்ள போதிலும், மீளாய்வாண்டிற்கான சுற்றறிக்கைப் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் வருடத்திற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு 2020.02.07 ஆந் திகதி 734 ஆம் ஆணைக் குழுக் கூட்டத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அச் செயற்பாட்டுத் திட்டம் ஆணைக்குழுக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. கொரானா நிலைமை காரணமாக மீண்டும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்படுவது 2020.12.24 ஆந் திகதியாகும். அதில் வழங்கப்படும் அறிவுறுத்தலின் பிரகாரம் 2020 ஆம் வருடத்தில் திருத்தப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டம், 2021 ஆம் வருடத்தில் முதலாம் காலாண்டில் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | வருடம் தொடங்க முன்னர் சுற்றறிக்கை பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | பொது முயற்சிகள் சுற்றறிக்கை<br>(i) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கச் சுற்றிக்கையின் | | | |
| | • 4.2.6 ஆம் பிரிவு | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு | 2020 ஆம் வருடத்தில் நாட்டில் நிலவிய கொவிட் - 19 | காலாண்டு செயலாற்றல் அறிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | காலாண்டு செயலாற்றல் அறிக்கையானது காலாண்டு முடிவடைந்து 30 நாட்களுக்குள் வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவின் முகாமைத்துவம் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவில்லையென்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | தொற்று நோய் நிலைமை காரணமாக ஆணைக்குழுவின் கடமை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில் தடைகள் காணப்பட்டன. இந் நிலைமையால் காலாண்டு முன்னேற்றங்கள் பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் பொது திறைசேரிக்கு சமர்பிக்கப்படுவதில் சிக்கல்கள் இருந்த போதிலும் வரிசை அமைச்சினால் அவ்வப்போது நடாத்தப்படுகின்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் காலாண்டுச் செயலாற்றல் சமர்பிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்டதன் பிரகாரம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| • 6.5.3 ஆம் பிரிவு | இதன் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட வெண்டிய போதிலும் 2015,2016,2017 மற்றும் 2018 ஆம் வருடங்களுக்கான வருடாந்த அறிக்கைகள் மீளாய்வாணடின் இறுதி வரையில் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 மற்றும் 2016 ஆம் வருடங்களில் தயாரிக்கப்பட்ட வருடாந்த அறிக்கைகள் சமர்பிக்கப்படுவதற்கான 2018.08.09 ஆந் திகதி வரிசை அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன் 2021 ஆம் வருடத்தில் அவற்றில் காணப்பட்ட தவறுகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டதன் பின்னர் 2015,2016,2017,2018 மற்றும் 2019 ஆகிய வருடங்களுக்குத் தயாரிக்கப்பட்ட வருடாந்த அறிக்கைகள் சமர்பிக்கப்படுவதற்கு 2021.07.14 அந் திகதி காணி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | வருடதந்த அறிக்கை தாமதமின்றி பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) 2015 யூன் 17 ஆம் திகதிய பீஈடீ 3/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் தலைவருக்கும் நிறைவேற்றுப் பணிப்பாளருக்கும் வீட்டு வாடகைப் படி மற்றும் உபசரிப்பு படியினைப் பெற்றுக் கொள்வதற்கு தகைமை இல்லாத போதிலும், அதற்கு முரணாக ஆணைக்குழுவினால் மீளாய்வாண்டின் போது ரூபா 1,200,000 தொகையான வீட்டு வாடகை படி மற்றும் உபசரிப்பு படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | விரைவில் உறுதிகளை வழங்குவதற்கான செயற்திட்டம் செயற்படுத்தப்படுவதற்கான தேவையின் அடிப்படையில் ஆணைக்குழுவிற்கு அண்டிய பிரதேசத்தில் நிறுவனத்தின் முக்கிய அதிகாரிகள் தங்க வைக்கப்படுவதற்காக மூன்று வீடுகள் வாடகை அடிப்படையில் வழங்கப்படுவதற்காக ஆணைக்குழுவின் தீர்மானத்தின் மூலம் கொள்கை ரீதியான இணக்கப்பாடொன்று வழங்கப்பட்டு ரூபா 30,000 | சட்டரீதியற்ற கொடுப்பனவுகள் மீண்டும் அறவிடப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | வீதம் இல்லப்படிகள் செலுத்தப்பட்டன. | |
| (உ) | 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 28(ஆ) பிரிவு | சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய பதவிகளை உருவாக்குவதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறல்லாது மீளாய்வாண்டின் இறுதிக்குள் 06 உத்தியோகத்தர்கள் ஆரம்ப தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர். | காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் 2020ஆம் ஆண்டுக்குள் காணி உறுதிப்பத்திரங்கள் விநியோகம், "கிராமத்திற்கான காணி ஆணைக்குழு" நடமாடும் திட்டம், ரன்பிம நவோதயா நிகழ்ச்சித்திட்டம், வனஸ்பதி மரம் நடும் திட்டம் போன்றவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அத்தகைய நிறுவனரீதியாக விரிவுபடுத்தப்பட்ட பாத்திரத்தை முன்னெடுப்பதற்கு ஆரம்ப நிலை ஊழியர்களின் தேவை நிலவியது. இதன்படி, நிலவிய தேவையை நியாயப்படுத்தி ஆணைக்குழு பத்திரத்தை சமர்ப்பித்து பெறப்பட்ட அங்கீகாரத்துடன் உரிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின்படி அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு மட்டுமே உத்தியோகத்தர்கள் பணியமர்த்தப்பட வேண்டும். |
| (ஊ) | 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 பந்தி | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள மாதிரிக்கமைய பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டுக்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டுக்கான பெறுகைகள் திட்டம் அந்த ஆண்டுக்குரிய செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், ஆணைக்குழுவின் ஆலோசனைக்கமைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு அனுப்பப்பட்டது 2020.12.24 ஆந் திகதியே ஆகும். அதன் போது மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் பின்னர் 2021 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் இடம்பெற்ற முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுவின் கூட்டங்களின் மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (எ) | 2018 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய பொது முயற்சிகள் தொடர்பான | காணிகளை முறைப்படியாக பட்டியல்படுத்துவதற்காகவும், அளவீட்டு பணிகளை மேற்கொள்வதற்காகவும் ஒரு | 2018 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய 2/1/231 (II) ஆம் இலக்க மற்றும் 2021.04.21 ஆந் திகதிய பொது | பொது முயற்சிகள் தொடர்பான குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| தெரிவுக் குழுவின் சிபார்சு | சிறப்பு பணிக்குழுவை நிறுவுதல், ஆவணங்களின் பற்றாக்குறையினால் ரூபா 2 பில்லியன் கடனை மீளப்பெற முடியாத நிலை ஏற்பட்டமை தொடர்பில் சபையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தொடர்பான அறிக்கையை குழு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்தல், ஆணைக்குழுவினால் நன்மைகள் அற்ற காணிகள் தொடர்பான அனுகூலங்களைப் பெறுவதற்கான வழிமுறையை உருவாக்குவதற்கும், ஆணைக்குழுவினால் பல்வேறு நிறுவனங்களுக்கு நிலுவை குத்தகைக்கு வாடகை அடிப்படையில் குத்தகைக்க விடப்பட்ட காணிகள் பற்றிய விரிவான அறிக்கை தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனங்களுக்கான குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான முன்னேற்றம் குறித்த அறிக்கை, காணி அமைச்சு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 285,236,301 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 1,291,127 ஆகும். அதற்கிணங்க நிதி விளைவுகளில் ரூபா 283,945,174 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு காணிகளின் குத்தகை வாடகை வருமானத்திலான அதிகரிப்பானது பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பதுளை மாவட்டத்தில் ஹாலிஎல பிரதேச செயலகத்தில் அமைந்துள்ள க்ளேன் எல்பின் தோட்டம் எனும் காணியில் சுமார் 04 ஏக்கர் 02 ரூட் அளவான காணி 1978 ஆம் ஆண்டு முதல் 2009 ஆம் ஆண்டு வரையிலும் கோவில் ஒன்றினால் 31 | இந்த காணித்துண்டுக்கு உரிய பயன்பாட்டுக் கட்டணத்தை வசூலிக்க 2009.04.02 அன்று நடைபெற்ற ஆணைக்குழு அமர்வில் முடிவு செய்யப்பட்டாலும், பயன்பாட்டுக் கட்டணம் எவ்வளவு என்பது குறித்து கோயில் நிர்வாகத்துக்குத் | அங்கீகரிக்கப்படாத நில பயன்பாடு தொடர்பாக தற்போதுள்ள சட்ட விதிகளின்படி நடவடிக்கை எடுத்து, குத்தகையை முறைப்படுத்தி, நிலுவைக் குத்தகை தொகையை |

| | | | |
|---|---|---|---|
| | அதிகாரமின்றி பயன்படுத்தப்பட்டிருந்தமையால் 2009 ஆம் ஆண்டிலிருந்து அறவிட நிர்வாகக் கட்டணங்களை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக கோவிலின் நிர்வாகத்திற்கு சபையினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், உரிய கட்டணங்களை கணிப்பிட்டு கோவில் நிர்வாகத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், 2009 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட வேண்டிய ரூபா 5,410,964 ஆன குத்தகைப் பணத்தை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தெரிவிக்கப்படவில்லை. இந்த நிலத்தை பழைய மதிப்பீட்டுப் பெறுமதியின் அடிப்படையில் உரித்து மாற்றத்தை கோரி குத்தகை செலுத்தல் தவிர்க்கப்பட்டிருந்தது.<br><br>2021 ஆம் ஆண்டிற்குள் நிலுவைத்தொகை தவணை முறையில் வழங்கப்படும் என நிர்வாக சபைத் தலைவர் 2021.11.09 அன்று எழுத்து மூலம் எமக்கு அறிவித்துள்ளார். பயன்பாட்டுக் கட்டணம் தொடர்பான முடிவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். | வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கேகாலை மாவட்டத்தில் மாவனல்லை பிரதேச செயலாளர் பிரிவில் கொட்டகலவத்தை எனப்படும் 75 ஏக்கர் காணி 30 வருட காலத்திற்கு சிறுவர் இல்லத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்ததுடன் அதற்கான குத்தகை காலம் 2009 ஆம் ஆண்டு நிறைவடைந்திருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாக காணப்பட்ட ரூபா 13,265,485 குத்தகைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 1979 ஆம் ஆண்டின் போது குத்தகை ஒப்பந்தம் எண் 32 மூலம் இந்த நிலம் 30 ஆண்டு காலத்துக்கு வழங்கப்பட்டது.<br><br>இந்த குத்தகை ஒப்பந்தப்படி, 05 வருடங்களுக்கு ஒரு தடவை குத்தகை திருத்தம் உள்ளடக்கப்படாமை மற்றும் இது மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான காப்பகம் என்பதால், 30 ஆண்டுகளாக ஆண்டுக்கு ரூபா 17,250 படியாக குத்தகைப் பணம் அறவிடப்பட்டுள்ளது. குறித்த சிறுவர் இல்லத்தின் தலைவர், செயலாளர் மற்றும் கணக்காளர் ஆகியோரை 2021.11.08 ஆந் திகதி தலைமை அலுவலகத்திற்கு | தற்போதுள்ள நடைமுறைக்கமைய நிலத்தை குத்தகைக்கு வழங்குவதற்கு மற்றும் குத்தகைப் பணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வரவழைக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டதுடன், 2009 முதல் குத்தகை செலுத்துவதுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது. | |
| (இ) | ஹோமாகம பிரதேசத்தில அமைந்துள்ள் லேலண்ட் தோட்டம் எனப்படும் 6 ஏக்கர் காணி தனியார் நிறுவனமொன்றுக்கு 50 வருட குத்தகைக்கு 2005 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 09 ஆம் திகதி வழங்கப்பட்டுள்ள போதிலும், மீளாய்வாண்டின் இறுதிக்குள் செல்லுபடியாகும் குத்தகை ஒப்பந்தத்தை எட்டுவதற்கு சபை நடவடிக்கை எடுக்கவில்லை என்பதுடன், நிலுவையாக காணப்பட்ட ரூபா 12,149,260 குத்தகைத் தொகையை அறவிடுவதற்கு சபை தவறியிருந்தது. | லேலண்ட் தோட்ட காணியில் இருந்து குறித்த நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட 06 ஏக்கர் காணிக்கான குத்தகைத் தொகை 2005.09.09 முதல் 2019.09.09 வரை எவ்வித திருத்தமும் இன்றி செலுத்தப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்களுக்கான குத்தகை ஒப்பந்தங்களை தயாரிக்குமாறு சட்டப் பிரிவுக்கு உத்தரவிடப்பட்ட போதிலும், 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை குத்தகைப்பணத்தில் திருத்தம் செய்யப்படவில்லை என்ற காரணத்தால் ஒப்பந்தங்கள் வரையப்படவில்லை. எனவே, 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தப்பட்ட மதிப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | தற்போதுள்ள நடைமுறைக்கமைய நிலத்தை குத்தகைக்கு வழங்குவதற்கு மற்றும் குத்தகைப் பணத்தை வசூலிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | காலி மாவட்டத்தில் மஹஹெந்தென்ன தோட்டத்தில் காணி 10 ஏக்கர் காணி எண்டர்பிரைஸ் ஸ்ரீலங்கா கடன் திட்டத்தின் கீழ் வீடமைப்புத் திட்டத்திற்காக சமூக நலச் சங்கத்திற்கு நன்கொடை அளிக்கப்பட்டமைக்கு மேலதிகமாக, ஒப்பந்தம் மூலம் சம்பந்தப்பட்ட நிலத்தின் உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்காக ரூபா 1,000,000 முன்பணம் 10 சதவீத வருடாந்திர வட்டியின் அடிப்படையில் 6 மாதங்களுக்குள் திருப்பிச் செலுத்தும் அடிப்படையில் | ஒரு சமூக நல சங்கத்திற்கு 2019 மார்ச் 26 அன்று மஹாஹெந்தென்ன தோட்ட நிலத்திலிருந்து 10 ஏக்கர் மற்றும் திட்டத்தை செயல்படுத்த 10% நிர்வாகக் கட்டணத்துடன் மீள அறவிடலின் அடிப்படையில் ரூபா 1,000,000 ஆன தொகை வழங்கப்பட்டுள்ள போதிலும், அந்தத் தொகையை மீளச் செலுத்துமாறு சம்பந்தப்பட்ட சங்கத்திற்கு எழுத்து மூலம் தெரியப்படுத்திய போதும் அதனைச் செலுத்தத் | நிலத்தை அப்புறப்படுத்தல் தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் விதிமுறைகளின்படி செய்யப்பட வேண்டும் மற்றும் வெளியாட்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2019 இல் வழங்கப்பட்டது. மீளாய்வாண்டின் இறுதிவரை, உரிய வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதுடன், முன்பணத்தையோ வட்டியையோ மீளப்பெறுவதற்கு சபை நடவடிக்கை எடுக்கவில்லை. | தவறிய சங்கத்தின் மீது சட்டப் பிரிவு சட்ட நடவடிக்கை எடுத்து வருகிறது. இதற்காக சங்கத்திற்கு குறிப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. | |
| (உ) | 2009 செப்டெம்பர் 23 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் உலப்பனை கைத்தொழில் பேட்டையில் 5 ஏக்கர் 20 பேர்ச்சஸ் காணி தனியார் நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு விடப்பட்டது. 2016 ஏப்ரல் 19 ஆந் திகதியன்று, குத்தகைதாரர் நிலத்தை அடமானம் வைத்து தனியார் வணிக வங்கியில் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், அடமானம் வைக்கப்பட்ட சொத்தை ஏலத்தில் விற்க குத்தகைதாரர் முடிவு செய்திருப்பதாக ஆணைக்குழுவிற்கான பிரதியை சேர்த்து சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு வங்கி தெரிவித்த போதிலும், இது தொடர்பாக வங்கியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவை குத்தகை தொகையான ரூபா 1,340,162 இனை மீளப்பெறுவதற்கு சபை நடவடிக்கை எடுக்கவில்லை. | உலப்பனை கைத்தொழில் பேட்டையில் 283 ஆம் வரைபட இலக்கமுடைய காணித் துண்டு 05 ஏக்கர் 01 ரூட் 20 பேர்ச் பரப்பளவான காணி தனியார் நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும் 2019 ஆம் ஆண்டு வரையான நிலுவைத் தொகையை மீளப் பெறுவது தொடர்பாக குத்தகைதாரருடன் பல தடவைகள் கலந்துரையாடிய போதிலும் குத்தகை செலுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பேச்சுவார்த்தையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், குத்தகையை மீளப் பெற வேண்டியிருப்பதால், அது சட்டப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட குத்தகைதாரருக்கு சம்மன் அனுப்பப்பட்டுள்ளது. | நிலங்களை குத்தகைக்கு விடுதல் மற்றும் அறவிடுதல் ஆகியவை தற்போதுள்ள நிறுவன முறைப்படி செய்யப்பட வேண்டும் மற்றும் குத்தகைக்கு உத்தரவாதம் அளிக்க சபையின் அனுமதி வழங்கும் முறை திருத்தப்பட்டு குத்தகை தொடர்ந்து பெறப்படுவதை உறுதி செய்ய வேண்டும். |
| (ஊ) | மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கீரிமுட்டிவத்தை என்றழைக்கப்படும் 04 ஏக்கர் காணி 2011 ஆம் ஆண்டு 30 வருட காலத்திற்கு தனியார் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்த போதிலும், செயற்திட்டத்தை மேற்கொள்வதில் உள்ள சிரமங்கள் காரணமாக 2016 ஆம் ஆண்டு 02 தடவைகள் | குறித்த குத்தகை கம்பனியால் 2016.01.13 மற்றும் 2016.03.18 ஆகிய திகதிகளில் குறித்த காணியை சுவீகரிப்பதற்காக ஆணைக்குழுவிற்கு அறிவித்திருந்ததுடன் அதன் பின்னர் பல தடவைகள் மாவட்ட பணிப்பாளர் காணியை | சபையின் பொதுவான குத்தகை அறவிடல் நடைமுறைக்கு ஏற்ப குத்தகை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அந்தக் காணியை மீட்பதாக நிறுவனம் கடிதங்கள் மூலம் சபைக்கு அறிவித்திருந்தது. திட்டம் தொடர்பான நிலத்தை கையகப்படுத்துவது 2018 வரை தாமதமானது. காலதாமதம் காரணமாக, 2016 முதல் 2018 வரையான காலப்பகுதியில் நிலுவையில் உள்ள ரூபாய் 2,139,879 குத்தகையை கம்பனியிலிருந்து மீளப்பெற முடியாமல் போனதுடன், குறித்த காலப்பகுதியில் நிலத்தை வேறு தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கும் வாய்ப்பையும் நிறுவனம் இழந்திருந்தது. | சுவீகரிப்பதற்காக சென்றிருந்த போதிலும் நிலத்தின் இயந்திரங்கள் அகற்றியிராமையால் மற்றும் எவரும் முன்வந்திராமையால் உரித்தினை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.<br><br>2016.02.22 முதல் 2018.08.11 வரையிலான காலகட்டத்தில் உற்பத்திப் பணிகள் நடைபெறாததால், நிலுவை குத்தகை தொகையை செலுத்துவதில் இருந்து விலக்கு அளிக்க 2018.08.02 அன்று நடைபெற்ற ஆணைக்குழுவின் 712வது அமர்வில் தீர்மானிக்கப்பட்டது. | |
| (எ) | மாத்தளை மாவட்டத்தில் பல்லேபொல பிரதேச செயலகப் பிரிவில் அக்குரம்படவத்த எனும் காணிக்கு சொந்தமான காணி இலக்கம் 2011/133 வரைபடத்தில் காணி துண்டு இலக்கம் 01 இல் காணப்படும். 02 ஏக்கர் 03 ரூட் 37.13 பேர்ச்சஸ் குத்தகை அடிப்படையில் பல்லேபொல பிரதேச சபைக்கு விளையாட்டு மைதானம் அமைப்பதற்காக 2007 ஆம் ஆண்டு முதல் 30 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. குறித்த குத்தகை வழங்குவதற்காக அரசாங்க மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீடு கோரப்பட்டிருந்தது 2012 ஆகஸ்ட் 15 அன்று அதாவது உடைமை ஒப்படைக்கப்பட்டு 04 ஆண்டுகளுக்குப் பிறகு என்பதுடன், மீளாய்வாண்டின் | 2007-2012 வரையிலான 5 வருடங்களுக்கான குத்தகைத் தொகை 2013.08.27 அன்று பிரதேச சபைக்கு அறிவிக்கப்பட்டது. அந்தத் தொகையை செலுத்தாத நிலையில் 2017.10.18 மற்றும் 2018.02.12 ஆகிய தேதிகளில், அந்த ஆண்டுகளுக்கான உரிய நிலுவை குத்தகை தொகையும் குறிப்பிடப்பட்டு குத்தகை தொகை செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br><br>பல்லேபொல பிரதேச சபை குறைந்த வருமானம் பெறும் பிரதேச சபையாக இருப்பதால் குத்தகை செலுத்த முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி, இந்த மைதானத்தை அபிவிருத்தி செய்யப்படாத காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியின் | குத்தகையாளரிடம் உரிய முறையில் குத்தகை தொகை அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இறுதியில் நிலுவையில் உள்ள ரூபா 2,242,000 குத்தகையை அறவிட்டிருக்கவில்லை. | அடிப்படையில் சுதந்திரப் பத்திரம் மூலம் மாற்றுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறித்த தகவல்களை பெற்று குத்தகை அடிப்படையில் மாற்றுவதற்கு ஆணைக்குழு எடுத்த தீர்மானத்தில் திருத்தம் செய்து விற்பனை மூலம் உரித்து மாற்றப்படுமா என்பது குறித்து ஆணைக்குழுவில் முன்வைக்க எதிர்காலத்தில் தீர்மானம் எடுக்கப்படும். | |
| (ஏ) | களுத்துறை மாவட்டம் கலவிலவத்தையில் ரூட் 02 9.94 பேர்ச்சஸ் காணி 2001 செப்டெம்பர் 19 ஆம் திகதி ஒப்பந்தம் இலக்கம் 8502 மூலம் உல்லாச விடுதி ஒன்றை அமைப்பதற்காக தனியார் கம்பனியொன்றுக்கு குத்தகைக்கு விடப்பட்டதுடன், குறித்த நிறுவனம் 2001 ஆம் ஆண்டு இரண்டு தடவைகள் குறித்த காணியை அனுமதியற்ற குடியிருப்பாயர்கள் ஆக்கிரமித்துள்ளதாக அறிவித்திருந்தது. ஆனால், இது தொடர்பாக சபை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. குறித்த கம்பனியால் 2002 ஆம் ஆண்டு முதல் குத்தகை செலுத்தத் தவறியிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய குத்தகை ரூபா 23,894,700 ஆகும். | இந்த நிலம் தொடர்பான பிரதம மதிப்பீட்டாளரின் மதிப்பீடு 2019.05.14 அன்று பெறப்பட்டிருந்ததுடன், 2019.06.25 அன்று குத்தகைதாரருக்கு அறிவிக்கப்பட்டது. அப்போது புதிய ஒப்பந்தம் இல்லாததால், இந்த நிலத்திற்கு வழங்கப்படும் குத்தகை ஒப்பந்தத்தில் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை குத்தகையில் திருத்தங்கள் இடம்பெற வேண்டும் என்ற நிபந்தனை சேர்க்கப்பட்டுள்ள போதிலும், திருத்தப்பட்ட குத்தகையை வசூலிப்பது தொடர்பாக சட்டச் சிக்கல் எழுந்ததால், இந்த திருத்தப்பட்ட குத்தகைத் தொகை இறுதிக் கணக்குகளில் சேர்க்கப்பட்டது. எவ்வாறாயினும், குத்தகைதாரர்களுக்கு குத்தகை எவ்வளவு என்பது தெரிவிக்கப்பட்டு, மேலதிக நடவடிக்கைக்காக சட்டக் குழுவுக்கு அனுப்பப்பட்டு மேலதிக நடவடிக்கைகளுக்காக ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | கள ஆய்வு உத்தியோகத்தர்களின் உதவியுடன் முறையான செயல்முறையை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துதல். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் நில அளவீடு மற்றும் முறைப்படுத்தலின் போது மாற்றத்திற்கு உட்பட்ட நிலங்களை அளவீடு செய்த அங்கீகரிக்கப்பட்ட நில அளவையாளர்களுக்கு ரூபா 33,503,021 தொகை செலுத்தப்பட்டுள்ளது. நிறுவனத்தின் விரைவுப் உறுதிப்பத்திரம் வழங்கும் நிகழ்ச்சிதிட்டம் இருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதிக்குள் ரூபாய் 945,323 மட்டுமே திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளது. | இந்த அளவீட்டு பணிகள் 2017.11.23 அன்று நடைபெற்ற ஆணைக்குழுவின் 9980 ஆவது ஆணைக்குழுவின் பத்திரம் தொடர்பாக வழங்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது வரையிலும் உறுதிப்பத்திரங்கள் வழங்கும் பணி விரைவுபடுத்தப்பட்டுள்ளதால், ஆணைக்குழுவினால் செலுத்தும் நில அளவைக் கட்டணம், மோசடி செய்பவர்களிடம் இருந்து வசூலிக்கப்படுகிறது. | ஆணைக்குழுவின் நிதியை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்பதுடன், உறுதிப்பத்திரங்களை வழங்குதல் விரைவுபடுத்தி அளவீட்டுக் கட்டணம் வசூலிக்க வேண்டும். |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| கடந்த 2002 ஆம் ஆண்டு கணனி மென்பொருள் பொதியை கொள்வனவு செய்வதற்காக தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 17,000,000 தொகையை பெற்றுக்கொள்ளவோ அல்லது மென்பொருள் பொதியை பெற்றுக்கொள்ளவோ சபை நடவடிக்கை எடுக்கவில்லை. | இந்த ரூபா 17 மில்லியன் முற்பணம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் மற்றும் இலஞ்ச ஊழல் தொடர்பான சாட்டுதல்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவும் குறித்த விசாரணைகளை மேற்கொண்டு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது “இலஞ்ச சட்டத்தின் பிரகாரம் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து பொதுவான சந்தேகத்திற்கு இடமில்லாத வகையில் சான்றுபடுத்துவதற்கு போதிய விடயங்கள் இல்லாதிருந்தமையால் இலஞ்ச ஊழல் | பணம் அல்லது உரிய மென்பொருளைப் பெற வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தொடர்பான சாட்டுதல்களை விசாரணை செய்யும் ஆணைக்குழு 2013.11.23 ஆந் திகதி தீர்மானித்துள்ளது என்பது ஆகும்.” | |

**3.4 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதிக்குள் 03 சிரேஷ்ட மட்டத்திலான உத்தியோகத்தர்களும், 12 மட்டத்திலான உத்தியோகத்தர்களும் உட்பட 49 வெற்றிடங்களை நிரப்பவோ அல்லது தேவைக்கேற்ப பதவிகளை திருத்தவோ சபை நடவடிக்கை எடுக்கவில்லை. | தற்போது காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் 2018 அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மீள்திருத்தி புதிய ஆட்சேர்ப்புத் நடைமுறையொன்று மற்றும் ஆணைக்குழுவின் விரிவான பணிப்பொறுப்பினை அடிப்படையாக கொண்டு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | தற்போதுள்ள வெற்றிடங்களை நிரப்பவோ அல்லது பணியாளர்களின் தேவைக்கேற்ப பதவிகளை மாற்றியமைக்கவோ நடவடிக்கை எடுக்க வேண்டும். |